අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/12/07/19

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2025.12. 08

**சுற்றுநிருப இலக்கம் : 31/2025 (I)**

**அனைத்து மாகாண பிரதம செயலாளர்களுக்கும்**
**அனைத்து மாகாண கல்விச் செயலாளர்களுக்கும்**
**அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும்,**
**அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,**
**அனைத்து கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர்களுக்கும்,**
**அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும்,**

**தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு மாணவர்களை அனுமதித்தல்**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய 2025.10.10 ஆம் திகதியிடப்பட்ட இல. 31/2025 ஆம் இலக்க **சுற்றுநிருபத்தின் 4.0** பிரிவின் மூலம் **அனுசரனை வரையறைகளின்** கீழ் தரம் 6 இற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாகக் **குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக, 4.10 முதல் 4.14 வரை பகுதிகள் பின்வரும் திருத்தங்களும் சேர்க்கப்படுகின்றன.**

4.10 அனுசரணை வரையறைகளின் கீழ் பழைய மாணவர் வகுதிக்கு வழங்கப்பட்டுள்ள 7.5% சதவீதத்தில் இருந்து 5% புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையிலும், மீதமுள்ள 2.5% சதவீதமானது முனைப்புடனான பழைய மாணவர் வகுதியின் கீழ் மாவட்ட வெட்டுப் புள்ளியைத் தாண்டித் தகுதி பெற்ற மாணவர்களுக்காகவும் கீழே தரப்பட்டுள்ள புள்ளி வழங்கல் செயன்முறையின் படியும் தெரிவு செய்யப்படல் வேண்டும்

| **தொடர். இல** | **நியதி** | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1 | புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் (மாவட்ட வெட்டுப் புள்ளிகளைத் தாண்டிய மாணவர்கள் மாத்திரம்) | ஆகக் கூடியது 200 |
| 2 | பழைய மாணவர் சங்கத்தின் பிரதானமான பதவி ஒன்றை வகித்தல்.<br>(உப தலைவர்/ செயலாளர்/ பொருளாளர்) | 4 |
| 3 | பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவில் உறுப்பினராக இருத்தல். (குழுவின் கூட்டங்களில் பங்கேற்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.) | 3 |
| 4 | பழைய மாணவர் சங்க அங்கத்துவம்<br>(புலமைப் பரிசில் பரீட்சை நடாத்தப்பட்ட திகதிக்கு)<br>01-03 வருடங்கள் (01 புள்ளி)<br>03-05 வருடங்கள் (02 புள்ளிகள்)<br>05 வருடங்களுக்கு மேல் (03 புள்ளிகள்) | 3 ( ஆகக் கூடியது ) |
| **மொத்தப் புள்ளிகள்** | | ஆகக் கூடியது **210** |

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

4.11 முனைப்புடனான பழைய மாணவர் வகுதியின் கீழ் தகுதி பெறும் மாணவர்களைத் தெரிவு செய்யும் பணிகள் ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் அமைப்பு பின்வருமாறு இருக்க வேண்டும்:

i. அதிபர் – (தலைவர்)
ii. பிரதி/ உதவி அதிபர் (நிர்வாகம்) – (உறுப்பினர்)
iii. தரம் 6 பிரிவுத் தலைவர்/ தரப் பிரதானி – (உறுப்பினர்)
iv. பாடசாலையின் உத்தியோகபூர்வ பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் (செயலாளர்)
v. பழைய மாணவர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர் ஒருவர் (உறுப்பினர்)

4.12 பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர் மற்றும் பதவிக்கான புள்ளிகளை வழங்கும் போது, நேர்முகப் பரீட்சைக் குழுவானது தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் அதிபரின் பரிந்துரையின் மூலம் அந்தத் தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மட்டுமே குறிப்பிட்ட புள்ளிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

4.13 இந்த வகுதியின் கீழ் தகுதி பெறும் மாணவர்களின் பெயர்கள், புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகள் மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளைக் குறிப்பிடும் ஆவணத்தில் நேர்முகப் பரீட்சைக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கையொப்பம் மற்றும் பதவி முத்திரையை (பதவி முத்திரை இருப்பின்) இட வேண்டும். மேலும் அந்த ஆவணமானது 31/2025 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.4 பிரிவின்படி அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்

4.14 முனைப்புடனான பழைய மாணவர் பிரிவின் கீழ் தகுதி பெறும் மாணவர்களைத் தெரிவு செய்வது தொடர்பான அனைத்து பொறுப்புக்களும் நேர்முகப் பரீட்சைக் குழுவையே சாரும். இந்த நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகளை வழங்குதல் மற்றும் மாணவர்களைத் தெரிவு செய்தல் தொடர்பாக எழும் எந்தவொரு சட்ட ரீதியான நடவடிக்கைகளின் போதோ அல்லது விசாரணையின் போதோ அதற்கான பதில்களை வழங்குவதற்கு நேர்முகப் பரீட்சைக் குழு பிணைக்கப்பட்டுள்ளது.

நாலக கலுவெவ
செயலாளர்

பிரதிகள் :-

1. அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்
2. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்
3. கணக்காய்வாளர் நாயகம்
4. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
5. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
7. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்கள்
8. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் அனைத்து கிளைப் பிரதானிகள்